

திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தாட்கோ சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, அவர்களுக்கு மதிய உணவினை பரிமாறி அவர்களுடன் மதிய உணவு அருந்தினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர செயலாளர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், 1ம் மண்டலத்தலைவர் வெ.உமா மகேஸ்வரி, பல்லடம் நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார், வட்டக் கழக செயலாளர் நேதாஜி கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பூவரசக்குடி ஊராட்சி, அழகம்பாள்புரம் கிராமத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பகுதி நேர அங்காடி கட்டிடத்தை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 07.12.2024 அன்று திறந்து வைத்தார். உடன் திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### அரசின் மீது நம்பிக்கை வைத்து இன்றைக்கு

# அரசுப் பள்ளிகளில் சேரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதில்!

சென்னை, டிச. 11 - சட்டப் பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி, அரசின் மீது நம் பிக்கை வைத்து இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் சேரக் கூடிய மாணவர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள் ளார்.



இது குறித்து நடை பெற்ற விவாதம் வருமாறு:

**உடுமலை கே. ராதாகிருஷ்ணன்:** உடுமலைப்பேட்டை தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், மாக்கி னாம்பட்டி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள் ளிக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**, தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்க ளது அனுமதியோடு பதில் அளிக்கிறேன்.

உடுமலைப்பேட்டை தொகுதி, பொள்ளாச்சி ஒன்றியம், மாக்கினாம் பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 267 மாணவர்கள் படிக்கக் கூடிய பள்ளி. 14 ஆசியர் கள் உள்ளனர். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, 6 வகுப்பறைகள், 6 கழிவ றைகள் ஒரு ஆய்வுக்கூட் டம் 500 மீட்டருக்கான சுற் றுச்சுவர் என்று ஏறத்தாழ 2.33 கோடி ரூபாய்க்கான அரசாணை ஏற்கெனவே வெளியீடு செய்யப்பட்டி ருக்கின்றது. பொதுப் பணித் துறையின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி பெறப் பட்டவுடன், உடனடியாக அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, இந்தக் கல்வியாண்டிலே அது பயன்பாட்டுக்குக் கொண் டுவரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக சட்ட மன்ற உறுப்பினர் அவர்க ளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உடுமலை கே. ராதாகிருஷ்ணன்:** உடுமலைப்பேட்டை தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், மாக்கி னாம்படி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள் ளிக்கு கட்டடம் கட்டுவ தில் ஏற்கெனவே, அந்தப் பள்ளியில் இரண்டு, மூன்று மரங்கள் பெரிய அளவில் இருக்கின்றன. அந்த மரங் களை எடுப்பதிலே பொதுப் ப்பணித் துறை காலதாம தம் செய்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி இந்த பொதுப் பணித் துறை யினரோடு அரசு அதிகாரி களை அனுப்பி வைத்து, அந்த மரங்களை எடுத்தால் உடனடியாக பணிகளைத் துவங்கு வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அமைச் சர் அவர்கள் இதை செய்து தருவாரா என்பதை பேர வைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்பு கிறேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** ஏற்கெனவே சொன் னதுபோல், இதை பொதுப் பணித் துறையின் அமைச் சர் அவர்களின் கவனத் திற்கு கொண்டுசென்று, எவ்வளவு வேகமாக, விரை வாக அந்தப் பணியை செய்ய முடியுமோ, ஏனென்றால், தரமுயர்த்து வது என்று பார்த்தால், 2014-2015 அதே வளாகத் தில் தரமுயர்த்தப்பட்டிருக் கிறது என்று சொன்னா லும், அதற்கான infrast ructeஐ நாம் கொடுக்காமல் விட்டுவிட்டோம். அதற் கான இந்தப் பணிகளை ஏற்கெனவே சொன்னது போல், 2.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததோடு மட் டுமல்லாமல், அந்தப் பணி கள் நடைபெறுவதற்கு தடையாக இருக்கின்ற நீங் கள் சொன்னமாதிரி, அந்த மரத்தை அகற்றுவதாக இருந்தாலும் சரி, அதை யெல்லாம் பொதுப் பணித் துறையின் அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு கொண்டுசென்று, உடனடி யாக அந்தப் பணிகள் மேற்கொள் ளப்படும் என் பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உடுமலை கே. ராதாகிருஷ்ணன்:** உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன் றியம், சமத்தூர் பேரூ ராட்சி, உயர்நிலைப் பள் ளியில் 500க்கும் மேற்பட்ட வர்கள் படிக்கின்றார்கள். மாணவ, மாணவி கள் வகுப்பறைகள் குறைவாக இருக்கின்றது. அதிகளவில் மாணவ, மாணவிகள் வந்து செல்கின்றார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள், உடும லைப்பேட்டை சட்டமன் றத் தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், சமத்தூ ரிலே புதிதாக ஒரு கட்ட டம் கட்ட முன்வருவாரா என்பதை பேரவைத் தலை வர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் அவர் கள் சொன்னதுபோல, ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டபி றகு, அரசுப் பள்ளிகளின் மீது அதிகப்படியான நம் பிக்கை வைத்து, இன் றைக்கு சேரக்கூடிய மாண வர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என் பதே எங்களுக்கான ஒரு பெருமைதான். அதேநே ரத்தில் அதற்குத் தேவை யான அந்த infrastructure வகுப்பறைகள் அதிகம் தேவைப்படுகிறது என்று சொல்லும்போது, அதற்கு ஏற்கெனவே நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒரு பள்ளி வளர்ச்சிக்கென்று ஏறத் தாழ இதுவரைக்கும் எந்த வொரு அரசாங்கத்திலும் இல்லாத ஓர் அறிவிப்பாக 7,500 கோடி ரூபாய் மதிப் பீட்டில் 'பேராசிரியர் அன் பழகன் பள்ளி மேம்பாட் டுத் திட்டம்' என்ற மாபெரும் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இலக்கை பார்த்தீர்களென்றால், இந்த ஐந்தாண்டுகளில் 2022 ஆண்டில் நாம் அறி வித்திருக்கின்ற குறைந்த பட்சம் 18,000 வகுப்பறை களாவது கட்டிமுடித்திட வேண்டுமென்ற அந்தப் பணியில் இதுவரைக்கும் 2,497 கோடி ரூபாய் ஒதுக் கீடு செய்யப்பட்டிருக்கி றது. தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் அறிவிப் பின்படி, நம்முடைய நிதி யமைச்சர் அவர்கள் இந்தக் கல்வியாண்டில் தனியாக ஒரு ஆயிரம் கோடி ரூபாய் இந்த நிதியாண்டில் ஒதுக் கீடு செய்திருக்கிறார். Over all report நீங்கள் பார்த்துர்க ளென்றால், திட்டத்தி னுடைய மொத்த மதிப் பீடு 7,500 கோடி ரூபாய் இதுவரை ஒதுக்கீடு நிதி 2,497 இந்தக் கல்வியாண் டில் ஆயிரம் என்று 3,497 கோடி ரூபாய் என்று ஒதுக் கீடு செய்யப்பட்டிருக்கின் றது. பணிகள் நிறைவ டைந்து முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்ட கட்டடங்களின் விவரம் வகுப்பறைகள் 7,856 திறக் கப்பட்டிருக்கின்றது. 31 ஆய்வகங்கள், கழிவறை கள் 20 Units சுற்றுச்சுவர் 852 மீட்டர் இதுவரைக் கும் திறக்கப்பட்டிருக்கி றது. தற்போது பணிகள் நடைபெற்று வருபவை என்று பார்க்கும்பொழுது, ஏறத்தாழ 6,353 வகுப்பறை கள், 351 ஆய்வகங்கள், கழி வறைகள் 357, சுற்றுச்சுவர் 940 மீட்டர் என்று தொடர்ந்து இந்தப் பணி கள் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றது. எங்களு டைய இலக்கு என்பது 2027 ஆம் ஆண்டிற்குள் அந்த 18,000 வகுப்பறை கள் அதோடு சேர்த்து ஆய் வகங்கள், கழிவறைகள், சுற்றுச்சுவர் என்று முழு மையாக முடிக்கப்படும் என்கின்ற அந்தச் செய் தியை சட்டப்பேரவைத் தலைவர் மூலமாக உறுப் பினர் அவர்களுக்குத் தெரி வித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### அ.பாரிபாலன் வரவேற்புரை! மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமை!

# நாகை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

## தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல மாநாட்டில் பெரும் திரளாக பங்கேற்பது என தீர்மானம்!

நாகை, டிச. 11 - நாகை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பா ளர்கள், துணை ஒருங்கி ணைப்பாளர்கள் ஆலோ சனை கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவல கத்தில் உள்ள கூட்ட அரங் கில் நடைபெற்றது. நாகை மாவட்ட ஒருங்கிணைப் பாளர் அ.பாரிபாலன் தலைமை தாங்கினார்.

மாவட்ட துணை ஒருங் கிணைப்பாளர்கள் எஸ். செல்வமுத்துகுமரன், ஆ.செந்தில்நாதன், மா. ரெக்ஸ், காந்திமதிலோகநா தன், பரமேஸ்வரிவெங்கட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலை வர் என்.கௌதமன் தலைமை தாங்கி பேசினார். கூட்டத்தில் 12.12.2024 அன்று தஞ்சையில் நடை பெறும் மண்டல தகவல் தொழில் நுட்ப அணி கூட் டத்தில் நாகை மாவட்டத் தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு தக வல் தொழில் நுட்ப அணி யின் நிர்வாகி கள் அனைவ ரும் பெரும் அளவில் கலந்து கொள்வது என்றும்,

நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி களில் ஊராட்சி தகவல் தொழில் நுட்ப அணி நிர் வாகிகளையும், பூத் வாரி யாக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளையும், 2025 ஜனவரி 15ம் தேதிக் குள் நியமித்து முடித்து பட் டியலை சமர்ப்பிப்பது என் றும், 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் 200 தொகு திக்கு மேல் என்ற இலக்கை அடைய தகவல் தொழில் நுட்ப அணியினர் துரித மாக செயல்பட்டு தளபதி அவர்களின் ஆட்சி மீண்டும் அமைய களத்திலும், தளத்தி லும் கழக ஆட்சியின் சாத னைகளையும் பொதுமக்க ளிடம் கொண்டு சேர்க்கும் வகையில் அயராது உழைப் பது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### செங்கம் பேரூராட்சியில்

# கழிவுநீர் கால்வாய் அமைத்துத் தரப்படுமா?

## பேரவையில் செங்கம் மு.பெ.கிரி கேள்வி!

சென்னை, டிச. 11 - செங்கம் பேரூராட்சி யில் கழிவு நீர் கால்வாய் அமைத்துத்தரப்படுமா? என்று பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பி னர் மு.பெ.கிரி கேள்வி எழுப்பினார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வரு மாறு:

**மு.பெ.கிரி:** செங்கம் பேரூராட்சியில் கழிவுநீர் கால்வாய் அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வ ருவார்களா?



**அமைச்சர் கே.என். நேரு:** கடந்த ஆண்டு முழுமை யாக சாலைப் பணிகளுக் காக நிதி ஒதுக்கப் பட்டது. இந்த ஆண்டு மழைநீர் வடிகால் பணிகளுக்காக நிதி ஒதுக்குவதற்கு திட்டங் கள் தீட்டப்பட்டிருக்கின் றன. எனவே உறுப்பினர் அவர்கள் சொன்னது கவ னத்தில் கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### தமிழக துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

# முத்தியால்பேட்டை தொகுதி தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்!

புதுச்சேரி, டிச. 11

தமிழக துணை முதல் வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங் கும் விழாவாக,

47சிறுவியாபாரிகளுக்கு தள்ளுவண்டிகள், தையல் பயிற்சி முடித்த 47 மக ளிர்க்கு தையல் மிஷின் கள், டிவி மற்றும் முத்தி யால் பேட்டை தொகுதி திராவிட முன்னேற்ற கழக அலுவலகம் திறப்பு விழா, கழகக் கொடியேற்று விழா முத்தியால்பேட்டை தெபேசள்பேட் வீதியில் நடந்தது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. டி. சரவ ணன் ஏற்பாட்டில் நடை பெற்ற விழாவிற்கு, மாநில திராவிட முன்னேற்ற கழக அமைப்பாளரும், சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலை வருமான இரா.சிவா தலைமை தாங்கி கழக கொடி ஏற்றியும், கழக அலுவலகம் திறந்து வைத் தும், ஏழை, எளிய மக்க ளுக்கு நலத்திட்ட உதவி கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணை அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினரு மான வி.அனிபால் கென் னடி, தி.மு.க. இளைஞ ரணி அமைப்பாளர், எல் சம்பத், எம்.எல்.ஏ., தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கோபால், தொகுதி தி.மு.க. செயலா ளர் ஜி.பி. சௌரிராஜன், மகளிர் அணி அமைப்பா ளர் காயத்ரி,

தொகுதி அவைத் தலை வர் வை. எழிலன், தொகுதி துணைச் செயலாளர் ரவி, துணைச்செயலாளர் கலை வாணி, முன்னாள் கவுன்சி லர் தன சேகர், தொண்ட ரணி மாநில தலைவர் கோபிநாத், திமுக மக்கள் சேவை மதன் பாபு, மீனவ ரணி தங்கராசு, பூபதி மற் றும் தொகுதி திமுக நிர்வா கிகள், இளைஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித் தனர்.



தமிழ்நாடு முதல்வர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை தொடர்ந்து, திருவாரூரில் நடைபெற்ற நிகழ்வில் பயனாளிகளுக்கு 1.28 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார் . உடன் மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர செயலாளர் வாரை.பிரகாஷ், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், நகர்மன்ற தலை வர்கள் புவனப்ரியா செந்தில் , கவிதா பாண்டியன்,பாத்திமா பஷீரா மற்றும் அரசு அதிகாரிகள் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், அமிர்த. விஜயகுமார், ஏ.ஆர்.ராஜா மற்றும் வளர் உள்ளனர்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் பிராந்திய கரையில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி சார்பில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வழிகாட்டுதலின்படி பள்ளி மாணவ, மாணிவிகளுக்கு கல்வி உபகரணங்கள், போர்வை, மரக்கன் றுகள், அரிசி உள்ளிட்ட பொருட்களை வேதாரண்யம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் என்.சதாசிவம் வழங்கி னார். உடன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் க.சத்தியமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சோழராஜன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் இல.ஏகாம்பரம், எம்.இராஜகோபாலன், டி.சேதுராஜன், மா.சு.செல்வம், முத்துலெட்சுமி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் எஸ்.மோகன், வி.வி.செந்தாமரைசெல்வன், தாமோதரன், மா.சு.செந்தில், அன்புமணி, மோகனாதசமணி உள்ளிட்டோர் உள்ளனர்.




தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஃபெஞ்சல் புயல் நிவாரணப் பொருட்கள் அடங்கிய லாரியை விழுப்புரம் மாவட்டத்திற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. ஆகியோர் கொடியசைத்து அனுப்பி வைத்தனர். இந்நிகழ்வில் கும்பகோணம் மேற்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.கே.முத்துச்செல்வம், சுவாமிமலை பேரூர் செயலாளர் எஸ்.எம்.எஸ்.பாலசுப்ரமணியம், மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.இரவிசந்திரன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப் பாளர்கள் க.செந்தில்குமார், சீ.ராஜா, ஒன்றிய பொருளாளர் இளங்கோவன், மற்றும் பு.காளிதாஸ், சிவா, செழியன், செந்தில் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.




நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஃபெஞ்சல்' புயல் காரணமாக பாதிக்கப்பட்ட விழுப்பு ரம், கடலூர் பொதுமக்களுக்கு மழையின் காரணமாக வீடுகள் சேதமடைந்த பயனாளிகளுக்கு ரூ.68.87 இலட்சம் மதிப்பிலான வெள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, தலைமையில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நிவாரண உதவித்தொகை மற்றும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தார்.